



PIN news
தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






# தேசத்தின் எதிர்காலத்திற்காக இளைஞர் படையணி - பிரதமர் தினேஷ் குணவர்தன



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்தபோது திறமையும் ஆளுமையும் நிறைந்த இளைஞர் தலைமுறையை உருவாக்குவதற்காக முன்னெடுத்த தொலைநோக்கு வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியே தேசிய இளைஞர் படையணி என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தேசிய தலைவர்களை உருவாக்குவதற்கான தேசிய இளைஞர் படையணி முன்னெடுக்கும் வேலைத்திட்டம் பாராட்டுக்குரியது என்றும் பிரதமர் தெரிவித்தார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற தேசிய இளைஞர் படையணியின் வருடாந்த கலை விழா மற்றும் பரிசளிப்பு விழா "பௌர்ஷாபிமான-2022" நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன. தேசத்தின் எதிர்காலத்திற்காக இளைஞர் படையணி உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள் கடந்துவிட்டன. இளைஞர்களுக்கு இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்காக தற்போதைய ஜனாதிபதி. இளைஞர் சேவைகள் அமைச்சர் என்ற ரீதியில். அன்று பல பணிகளை முன்னெடுத்தார். பாடசாலை காலத்துக்குப் பிறகு பல்கலைக்கழகம் செல்லாத இளைஞர்களை வழிநடத்துவதில் இளைஞர் சேவைகள் மன்றம் பெரும் பங்கு வகிக்கிறது என்பது தெளிவாகிறது. அதற்காக இளைஞர் படையணி பாரிய பொறுப்பை ஆற்றுவதை நாம் அறிவோம்.

நாட்டுக்கு. இளைஞர் படையணி ஆற்றி வரும் மிகப்பெரிய பங்களிப்பு இளைஞர்களின் ஒற்றுமையாகும். எதிர்காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலுக்கு இளைஞர் படையணி போன்ற அமைப்புகள் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்ய முடியும். இளைஞர்களின் திறமைக்கு உதவும் வகையில் அனைத்து வசதிகளையும் இளைஞர் படையணி கொண்டுள்ளது. நமது இளைஞர்களின் திறன்களை வளர்த்து. எதிர்காலத்தை பொறுப்பேற்கக்கூடிய குடிமக்களை உருவாக்க இது உதவுகிறது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில். நானும் சன்ன குணதிலக்கவும் இந்தப் பணியை ஆரம்பித்தபோது எங்களுக்கு தேசிய இளைஞர் படையணியொன்று இருக்கவில்லை. இன்றைய ஜனாதிபதி மற்றும் அன்றைய நமது பிரதமரின் எண்ணக்கருவை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே முதன்மையான பொறுப்பாகும். சிறந்த ஆளுமை மிக்க. காலத்திற்கு ஏற்ற திறமையுள்ள. நல்ல தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் திறன் கொண்ட. தொழிற் சந்தைக்கு தயாரான. பொருத்தமான மனப்பாங்குள்ள இளம் தலைமுறையை உருவாக்குவதே அதன் அடிப்படைத் தேவையாக இருந்தது. இதுவரை. இந்த வேலைத்திட்டம் சுமார் 20 ஆண்டுகளுக்குள் முன்னேற்றம் கண்டுள்ளது. இன்னும் அரசியல் மயப்படாமல் செயற்பட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. நமது நாட்டிற்கு மிக முக்கியமான விடயம் இளைஞர்களின் எதிர்காலம் ஆகும். இன்று விருது பெற்ற அனைத்து இளைஞர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆதிவாசி பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தனர்



இந்நாட்டில் ஆதிவாசிகள் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தலைமையிலான ஆதிவாசி பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் (17) பாராளுமன்றத்திற்கு சமூகமளித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வைச் சந்தித்தித்தனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமூக மாற்றங்களினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுத்து வருவதோடு. அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு பல்வேறு தடைகளும் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பான விடயங்களை வன்னில எத்தோ தலைமையிலான குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். தற்போது வசிக்கும் இனக்குழுக்களில் ஆதிவாசிகள் மிகவும் பழமை வாய்ந்த பழங்குடியினர் என அறியப்படுகின்றனர்.

# அரச ஊழியர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள பாடநெறி ஆரம்பம்

(நூருல் ஹுதா உமர்)



*அரச ஊழியர்களுக்கான 150 மணித்தியாலம் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் ஆரம்ப நாள் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேசசெயலககேட்போர்கூடத்தில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் அவர்களின் வழிகாட்டலில், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பளீலின் தலைமையில் இடம்பெற்றது.*

*இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், மேலதிக மாவட்ட பதிவாளர் ஐ.எம்.பாயிஸ், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், நிதி உதவியாளர் ஏ.சி.முஹம்மட், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் ஏ.எல்.எம்.மாஹிர், எம்.எச்.எம்.ஹம்சார், சிரேஸ்ட காணி உத்தியோகத்தர் எம்.ஏ.எம்.ராபி, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.அஸ்ஹர் மற்றும் சிங்கள பாட வளவாளராக ஏ.எம்.எம்.முஜீப் ஆகியோர் கலந்துகொண்டனர். இப் பாடநெறி உத்தியோகத்தர் நலன்புரிசங்க செயலாளர் எம்.எஸ்.எம்.றியாஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் நடைபெறுகின்றது.*

# சமுர்த்தி கொடுப்பனவுடன் வழங்கப்படும் ஏனைய சலுகைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் - தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார

*தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்துள்ளார்.*

*அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாம் இல்லாதவர்கள், கஷ்டப்படுபவர்களை கவனிக்க வேண்டும். அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களை பலப்படுத்த வேண்டும். அவர்கள் சுயமாக எழுச்சி பெறும் நிலைக்கு கொண்டு வரவேண்டும். அவ்வாறு இன்றி அரசியல் பொறிமுறையாக சமுர்த்தியை வைத்துக்கொள்ள அனுமதிக்க மாட்டோம். சமுர்த்தி தொடர்பான ஏனைய விடயங்களை நீக்குவதற்காக ஜனாதிபதியிடம் சென்று பேசிய போது, அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு கூறினார்.*

*சமுர்த்தி கிடைக்க வேண்டியவர்களுக்கு கிடைக்கவேண்டும். தகுதியானவர்களுக்கு சமுர்த்தி வழங்கவேண்டும். இன்றும் சமுர்த்தி கிடைக்காதவர்கள். எனினும் வறுமையில் உள்ளவர்களுக்கு நாம் உதவ வேண்டும். ஆனால் ஏனைய சலுகைகளை அகற்றுவது தொடர்பில் யார் என்னை திட்டினாலும் பின்வாங்க மாட்டேன் என்றார்.*

# கைதான வேலன் சுவாமிகள் பிணையில் விடுதலை

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்து கொண்ட போது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற எதிர்ப்பு போராட்டத்தின் போது. பொலிஸார் தடுப்புக்களை ஏற்படுத்தி இருந்தனர். அதன்போது. பொலிஸாரின் தடுப்புக்களை தாண்டி செல்ல முற்பட்டனர். பொலிஸார் தண்ணீர் தாரை பிரயோகம் மேற்கொண்டர். அவ்வேளை பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர் என குற்றம் சாட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் (18) யாழ்ப்பாண பொலிஸாரினால் வேலன் சுவாமிகளும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார். அவரை யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர். வேலன் சுவாமிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 1,000 சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் ஒப்பந்த அடிப்படையில் இணைப்பு

*சுதந்திர தினத்திற்கு அமைவாக 1,000 புதிய பஸ் சேவைகளுடன் சாரதி மற்றும் நடத்துனர்களை சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொதுப் போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பேராசிரியர் பந்துல குணவர்தன நேற்று (18) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வாய்மொழி மூலமான கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறை காரணமாக 800 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடியாதிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.*

*இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற 75 பேருந்துகள் கிராமப் புற வீதி சேவைகளுக்கு வழங்கவும் சுதந்திர தினத்திற்கு மறுதினம் (பெப்ரவரி 05) மேலும் 150 பேருந்துகளை வழங்குவதற்கும் எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். சாரதிகளை மற்றும் நடத்துனர்களை ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அரசாங்க தகவல் திணைக்களம்)*




# அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க டெனிஸ் மைதானம் திறந்து வைப்பு

(பாறூக் ஷிஹான்)

அம்பாறை டி.எஸ்.சேனநாயக்கா பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட டெனிஸ் விளையாட்டு திடல் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை (18) ஆரம்பமான இந்நிகழ்வானது அதிதிகள் வரவேற்கப்பட்டதுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட டெனிஸ் திடல் பெயர் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது. அத்துடன் கண்காட்சி போட்டி ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டு அதிதிகளாக கலந்து கொண்டோர் அதில் பங்கேற்று விளையாடினர். தொடர்ந்து சமய ஆராதனை அதிதிகள் விளக்கேற்றல் வரவேற்புரை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு திடல் தொடர்பிலான பெட்டக காட்சி அத்துடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய டெனிஸ் திடல் அம்பாறை டி.எஸ் சேனநாயக்கா பாடசாலை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் அம்பாறை அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ். கிழக்கு மாகாண புதிய சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜெயலத். இலங்கை டென்னிஸ் சங்க தலைவர் இக்பால் பின் இஷாக். அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய ஸ்ரீ. இராணுவ டென்னிஸ் சங்க உப தலைவர் பிரிகேடியர் பி.விதானகே. அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே. ரத்னாயக்க உள்ளிட்ட கிழக்கு மாகாண முப்படை உயரதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் பொலிஸார் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கை டென்னிஸ் சங்கத்தின் தலைவர் இக்பால் பின் இஷாக்கின் பங்களிப்பின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மேலும் 07 பாடசாலைகளில் டென்னிஸ் மைதானங்கள் நிர்மாணிக்கும் பணிகள் எதிர்வரும் 03 மாதங்களில் மேற்கொள்ளப்பட உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. குறித்த டென்னிஸ் மைதானம் உருவாக்கப்படுவதன் நோக்கம் அம்பாறை நிர்வாக மாவட்டத்தில் 456 பாடசாலைகள் உள்ளன. ஆனால் அவற்றில் டென்னிஸ் மைதானங்கள் எதுவும் இல்லை. திகாமடுல்ல மாவட்டத்தில் இருந்து டென்னிஸ் வீரர்களை உருவாக்குதல்.இந்த டென்னிஸ் வீரர்களை தேசிய மட்டத்தில் இருந்து சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக்கில் 27.10.2022 அன்று டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியில் டென்னிஸ் மைதானம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த புதிய டென்னிஸ் மைதானம் 02 மாதங்கள் 20 நாட்கள் என்ற குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதுடன் இந்த டென்னிஸ் மைதானத்தின் செலவு 58 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாகும்.மேலும் இந்த டென்னிஸ் மைதானம் நிர்மாணமானது டி.எஸ் சேனநாயக்க கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் இந்த நிர்மாணத்திற்கு அம்பாறை வர்த்தக சங்கம் மற்றும் வர்த்தகர்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.





# நடிகர் வடிவேலுவின் தாயார் காலமானார்

*நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் தாயார் வைத்தீஸ்வரி (87) உடல்நலக் குறைவால் புதன்கிழமை இரவு காலமானார்.*

*'என் தங்கை கல்யாணி' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான வடிவேலு நூற்றுக்கணக்கான படங்களில் நகைச்சுவை நடிகராக அசத்தியுள்ளார்.*

*நீண்ட இடைவெளிக்கு பிறகு இரண்டு மாதங்களுக்கு முன் வெளியான நாய் சேகர் திரைப்படம் மூலம் ஹிரோவாக மீண்டும் என்ட்ரி கொடுத்தார் வடிவேலு.*

*இந்நிலையில், மதுரை வீரகனூரில் வசித்து வந்த வடிவேலுவின் தாயார் வைத்தீஸ்வரி என்கின்ற பாப்பா வயது மூப்பு காரணமாக உடல்நலக் குறைவு ஏற்பட்டு நேற்று இரவு உயிரிழந்தார்.*

*இதனைத் தொடர்ந்து, வடிவேலு தாயாரின் மறைவுக்கு திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.*



# ஆப்கானில் திருடிய குற்றத்திற்காக 4 பேர் கையை துண்டித்த தலிபான்கள்

*ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. அங்கு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். குறிப்பாக பெண்களுக்கு பல்வேறு தடைகளை கொண்டு வந்துள்ளனர். இதற்கிடையே குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என்று தலிபான்கள் சமீபத்தில் அறிவித்தனர்.*

*கசையடி, கை, கால் துண்டிப்பு, மரண தண்டனை அளிக்கப்படும் என்று தெரிவித்தனர். இந்தநிலையில் திருடிய குற்றத்துக்காக 4 பேரின் கைகளை துண்டித்து தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. கந்தகாரில் உள்ள கால்பந்து ஸ்டேடியத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் திருட்டு உள்ளிட்ட குற்றஞ்சாட்டப்பட்ட 9 பேரை அழைத்து வந்தனர். அவர்களுக்கு 35 முதல் 39 முறை கசையடி அளிக்கப்பட்டது. பின்னர் திருட்டு குற்றத்துக்காக 4 பேரின் கைகளை வெட்டி துண்டித்தனர்.*

*கடந்த 2021-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு கடந்த மாதம் 7-ந் திகதி பரா மாகாணத்தில் ஒருவருக்கு மரண தண்டனையை நிறைவேற்றினர்.*

*இதேபோல் பல்வேறு குற்றத்துக்காக பலருக்கு கசையடி உள்ளிட்ட தண்டனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதேபோன்ற தண்டனைகளுக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு கிளம்பியபோதும் அதை தலிபான்கள் அரசு கண்டு கொள்ளவில்லை.*



# புதிய அமைச்சர்கள் நியமனம்

வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக ஜீவன் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் இவர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.